## 7. தலைப்பு 7 – நீதிச் சேவை ஆணைக்குழு

---

### 7.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

நீதிச் சேவை ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 06 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 7.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**7.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையில் (அ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்புக்கள் மற்றும் 7.4 மற்றும் 7.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

(i) 03 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 50,150,000 தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) ஒரு செலவின விடயத்திற்காக மிகையான ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தினால் நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 10,287,604 ஆக இருந்ததுடன் அது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 27 சதவீதமாகக் காணப்பட்டது.

**7.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**7.4.1 கூட்டிணைந்த திட்டம்**

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் ஆணைக்குழுவினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

---

மேலே 7.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் இதற்கு பின்னருள்ள ஆணைக்குழுவின வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 26 ஆந் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

**7.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

---

மேலே 7.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆணைக்குழுவினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய போதிலும ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**7.4.4 உள்ளகக் கணக்காய்வு**

---

ஆணைக்குழுவிற்குரிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**7.4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்**

---

2012 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**7.5 மனிதவள முகாமைத்துவம்**

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 12 | 11 | 01 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 06 | 03 | 03 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 51 | 34 | 17 | - |
| (ஈ) | ஆரம்ப நிலை | 24 | 17 | 07 | - |
| (உ) | ஏனையவை(அமைய) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 93 | 67 | 28 | 02 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 28 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் மிகை எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரம் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.